# செய்தி மடல்

(சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வெளியீடு)

திருவள்ளுவர் ஆண்டு 2040 (பங்குனி-சித்திரை) ஏப்ரல் 2010 ஏர்-25, உழவு-4, விலை ரூ.10.00

ஆசிரியர், வெளியிடுபவர் :
BRT.சென்னியப்பன்
34, சீனிவாசப்பெருமாள் சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
போன் : 28351244 / 28352744

## கொங்கு நண்பர்கள் சங்கம்

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப்பெருமாள்
சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
Ph : 28351244
28352744

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை - 600 014
Ph : 28350432 /
Fax : 044-28351244

| | |
|---|---|
| தலைவர் | : BRT.சென்னியப்பன் |
| துணைத்தலைவர் | : ஈ.ஆர்.ஈஸ்வரன் |
| செயலாளர் | : பரணி கே. பாலசுப்பிரமணி |
| இணைச்செயலாளர் | : எஸ்.ஆர்.இராஜேந்திரன்<br>கே.சி.பிரபாகரன் |
| பொருளாளர் | : ஆர். செல்வராஜ் |
| தணிக்கையாளர் | : ஆர். பாலச்சந்திரன் |

செயற்குழு உறுப்பினர்கள் :

| | |
|---|---|
| எம். பொன்னுசாமி | செல்வி ஃபீட்ஸ் கே.கந்தசாமி |
| கே.ஏ.கணபதி | பி.ரவி |
| கே.ராஜாமணி | பி.இராமசாமி |
| வி.பி.செங்கோட்டுவேல் | பி.கே.ஈஸ்வரமூர்த்தி |
| ஆர். சண்முகவேல் | Dr.டி.எஸ்.செல்வராஜ் |
| மு. கார்த்திக் | Dr.எஸ்.அசோகன் |
| கே.கே. ரமேஷ் | N.பாலசுப்பிரமணியம் |
| ஜெ.ஆனந்த் | பி.அருள் |
| வி.பி.வீரப்பன் | எஸ்.சிவசாமி |
| ஆர்.இளங்கோ | Dr.மணிமேகலை புஷ்பராஜ் |
| கே. வரதராஜன் | உத்தமி பொன்னுசாமி |

## இந்த இதழில்


பொருளடக்கம் - 1
தலையங்கம் - 2
செயலாளர் அறிக்கை - 3
பிறந்த நாள் அழைப்பிதழ் - 5
படுகளம் - 6
மணமகள் தேவை - 9
அன்பு காட்டுதல் - 10
வானம் தொடலாம் வாங்க - 12
நியூமராலேஜி வாஸ்து - 15
உழவனின்றி உலகில்லை - 16
இரங்கல் கவிதை - 19
வாழ்த்துகிறோம் - 20
திருமணமாலை - 21
நம் கையில் - 22
மணமகன் தேவை - 23
நன்றி மடல் - 24
ஆட்கள் தேவை - 25
மணமகள் தேவை - 26
மணமகன் தேவை - 29
திருத்தம் - 32

### ஆசிரியர் குறிப்பு

வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / செய்தி மடல் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச்சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை.

# தலையங்கம்

அன்பார்ந்த கொங்கு சொந்தங்களே ! வணக்கம்.



செயற்குழு உறுப்பினர்களுடைய அன்பு கட்டளைக்கும் வற்புறுத்தலுக்கும் இணங்கி சங்கத்தின் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிறேன். உலகத்தில் உள்ள கொங்கு நண்பர்கள் சங்கங்களிலிலேயே தலையாய சங்கமான நம்முடைய சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திற்குத் தலைவராகியிருப்பதை அமரர் K.R.P.மோகனின் மறைவின் வருத்தம் கலந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன்.

சங்கத்தின் தலைவராக பல கடமைகளைச் செய்யவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன். செயலாளர் திரு. பரணி பாலு, பொருளாளர் திரு.ஆர்.செல்வராஜ், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அனைவரின் உதவியோடு எந்தத் தொய்வும் இன்றி சங்கத்தின் செயல்பாடுகளைச் செய்வேன் என்ற நம்பிக்கை எனக்கு முழுமையாக இருக்கிறது. இந்த தலையங்கத்தின் மூலமாக சங்க உறுப்பினர்கள் அனைவரது ஆதரவையும் நான் தலைவளாக இருக்கப்போகும் ஐந்து மாதங்களுக்கும் கோருகிறேன்.

செயலாளர் திரு.பரணி பாலு, பொருளாளர் திரு.செல்வராஜ் ஆகியோரது கடின உழைப்பில் புதிய கட்டடப் பணி முடியும் தருவாயில் இருக்கின்றது. ஏப்ரல் 18 ஆம் தேதி திறப்பு விழாவிற்கான பத்திரிக்கைகள் இந்நேரம் உங்களை வந்து அடைந்திருக்கும் என நம்புகிறேன். ஒவ்வொருவரும் தங்களுடைய சொந்தக் கட்டடமாகப் பாவித்து, குடும்பத்தோடு, திறப்பு விழாவில் கலந்து கொள்ளவேண்டுகிறேன். இச்சிறப்பு மிக்க மாளிகையைக் கட்டி முடிப்பதில் ஏறக்குறைய ரூபாய் 25 லட்சம் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதைச் சமாளிப்பதற்காக இதுவரை ரூ. 1000/- நன்கொடை அனுப்பாத நண்பர்கள் உடனடியாக தங்கள் பங்கை சங்கத்திற்குக் கொடுத்து உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய பட்ஜெட்டைத் தொடர்ந்து மாநில பட்ஜெட்டும் தாக்கலாகியிருக்கின்றது. விவசாயிகளின் எதிர்காலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. விவசாயப் பொருட்கள் உற்பத்தியை பெருக்குகின்ற முயற்சிகள் போதாது. ஆனாலும் அடித்தட்டு மக்கள் நலன் காக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கும், சிறு தொழில்களுக்கும் ஆட்கள் கிடைப்பதில்லை என்ற நிலைக்கு பட்ஜெட்டில் எந்தப் பதிலும் இல்லை. அமைச்சர்களையும், அதிகாரிகளையும் சந்தித்து நம் கருத்துக்களை எடுத்துச் சொல்வோம்.

புதிய கட்டடத் திறப்புவிழாவில் உங்கள் அனைவரையும் சந்திக்கிறேன்.

நம்மால் முடியும் என்ற நம்பிக்கையுடன்,

BRT சென்னியப்பன்
தலைவர்

❖❖❖❖

# செயலாளர் அறிக்கை

அன்புடையீர், வணக்கம்.



சென்னை கொங்கு நண்பர்கள் சங்க வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும் நாள் வருகிற 18-04-2010 ஞாயிற்றுக்கிழமை. ஆம் ! அன்றுதான் சங்கத்தின் சாதனை மகுடத்தில் வைரக்கல்லாக அமையவிருக்கும் தீரன் சின்னமலை மாளிகை திறப்பு விழா நடைபெற உள்ளது.

சென்னையின் மையப் பகுதியாக விளங்கும் இராயப்பேட்டையில் கொங்கு சொந்தங்களின் உதவியாலும் உழைப்பாலும் உருவாக்கப்பட்ட கொங்கு நாடு இல்லமும், வெள்ளி விழா இல்லமும் கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சாதனைகளுக்கும், சீரிய செயல்பாடுகளுக்கும் சான்றாக விளங்கி வருகின்றன. தற்போது சங்க வளர்ச்சியில் மேலும் ஒரு மைல் கல்லாக, பெருகிவரும் தேவைகளைக் கருத்தில் கொண்டு, மேற்கண்ட இரு இல்லங்களுக்கும் அருகிலேயே, இராயப்பேட்டை பீட்டர்ஸ் சாலையில், புதுக்கல்லூரிக்கு அருகாமையில் இம்மாளிகை உருவாகியுள்ளது.

இம்மாளிகைக்கான அடிக்கல் நாட்டுவிழா 07-06-2006 அன்று நடைபெற்றது. கொங்கு சாதனையாளர் விருது பெற்றவரும், தமிழகத்தின் சிறந்த கட்டட வடிவமைப்பாளர்களில் ஒருவருமாகிய திருமதி பாரதி செங்கோட்டுவேல் அவர்கள் மிகச்சிறப்பான முறையில் அனைவரும் பாராட்டும் வண்ணம் இக்கட்டடத்தை வடிவமைத்துக் கொடுத்துள்ளார். கொங்கு நண்பர்கள் சங்கத்திற்காக அவர் ஆற்றியுள்ள இந்தப் பணிக்காக ஊதியம் எதையும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கட்டடத்தை உருவாக்கும் பொறுப்பாளராக சங்கம் என்னை நியமித்தது. பல்வேறு சிரமங்களுக்கும், தடைகளுக்கும் இடையில் மிகச்சிறந்த முறையில் மிக அழகியதும், நல்ல தரம் வாய்ந்ததுமாக, அனைவரும் வியக்கும் வண்ணம் இக்கட்டடம் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. சங்கத்திற்குப் பணியாற்ற எனக்குக் கிடைத்த சிறந்த வாய்ப்பாகவே இதைக் கருதுகிறேன். என்னோடு துணைநின்று உழைத்த பொருளாளர் திரு. ஆர்.செல்வராஜ் மற்றும் சங்க நிர்வாகிகளுக்கு எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பெருமைமிகு மாளிகை உருவாக துணை நின்ற சங்கத்தின் முன்னாள் தலைவர் கொங்குக் குலமணி அமரர் திரு. கே.ஆர்.பி.மோகன் அவர்களின் உழைப்பும், வழிகாட்டுதலும், பேருதவியும் என்றும் மறக்க முடியாதவை, இம்மாளிகை கட்டி முடிக்க நன்கொடையளித்த கொங்கு சொந்தங்கள் அனைவருக்கும் சங்கத்தின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிற்குப் புகழ்சேர்க்க புதிய சட்டப்பேரவை வளாகம் கட்டப்பட்டுள்ள அதே சமயத்தில் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்திற்குப் புகழ் சேர்க்கக் கட்டப்பட்டுள்ளது இந்த மாளிகை. உலக மகளிர் தினம் 100 ஆம் ஆண்டு கொண்டாட இருக்கின்ற நேரத்தில் கொங்கு இனம் பெருமைபடக்கூடிய நிலையில் இருக்கின்ற, பல சாதனைகள் படைத்து வருகின்ற திருமதி சாந்தி துரைசாமி அவர்கள் இக்கட்டடத்தை திறந்து வைக்க இருப்பது மிகவும் பொருத்தமானதும், பெருமைபடக்கூடியதுமாகும்.

இம்மாளிகை திறப்புவிழாவில் கலந்துகொள்ள உங்கள் அனைவரையும் இரு கரம் கூப்பி வருக வருக என அழைக்கிறேன்.

நன்றி.

பரணி கே.பாலசுப்பிரமணி

செயலளாளர்

❖❖❖❖

# கொங்கு நண்பர்கள் சங்கம்

கட்டிட நிதிக்கு நன்கொடை அளித்தவர்கள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

| வ.எண். | உ.எண். | பெயர் | தொகை ரூபாய் |
|---|---|---|---|
| | | சென்ற இதழ் வரை மொத்த தொகை | 40,09,943 |
| 874 | | V.C.பெருமாள் | 25,000 |
| 875 | | கொங்கு நண்பர்கள் சங்கம், நாமக்கல் | 25,000 |
| 876 | 2685 | Dr.N.வேலுச்சாமி | 10,000 |
| 877 | | உத்தமி பொன்னுசாமி | 5,000 |
| 878 | | M.P.சுதந்திர குமார் | 1,000 |
| 879 | | P.P.குப்புசாமி | 1,000 |
| 880 | G.H. | S.அருண்குமார் | 1,000 |
| 881 | | K.L.நவநித் | 1,000 |
| 882 | 1816 | M.சின்னதம்பி | 1,000 |
| 883 | | Dr.P.V.துபளா L.H | 1,000 |
| 884 | | O.P.நவநீதகிருஷ்ணன் G.H | 1,000 |
| 885 | | C.காஞ்சனா L.H | 1,000 |
| 886 | | K.R.பாரதி விஷ்ணு G.H | 1,000 |
| 887 | | பாலசந்தர் G.H | 1,000 |
| 888 | 2563 | S.பொன்னுசாமி | 1,000 |
| 889 | | V.S.அருண்விஜய் G.H | 1,000 |
| 890 | | Dr.R.கார்த்திக்ராஜா G.H | 1,000 |
| 891 | 1668 | M.ஈஸ்வரமூர்த்தி | 1,000 |
| 892 | 1669 | N.கனகசபாபதி | 1,000 |
| 893 | 1670 | S.லோகநாதன் | 1,000 |
| 894 | | P.நித்தியதேவி L.H | 1,000 |
| 895 | | N.மஞ்சுநாதன் G.H | 1,000 |
| 896 | | S.ரேகா L.H | 1,000 |
| 897 | | S.ஹேமா L.H | 1,000 |
| 898 | | G.கோகிலா L.H | 1,000 |
| 899 | | R.சுப்பன் | 1,000 |
| 900 | | D.பெரியசாமி | 1,000 |
| 901 | | Dr.R.செழியன் | 1,000 |
| 902 | | N.நாச்சிமுத்து | 1,000 |
| 903 | | Dr.P.V.குணசேகரன் | 1,000 |
| | மொத்தம் | | 41,00,943 |

# தீரன் சின்னமலையின் பிறந்த நாள் அழைப்பிதழ்

17-04-2010 சனிக்கிழமை காலை 8.30 மணி



வரும் ஏப்ரல் 17ம் நாள் சனிக்கிழமை இந்திய முதல் சுதந்திர போராட்ட வீரன் தீரன் சின்னமலையின் பிறந்த நாள்.

17–04–2010 காலை 8.30 மணிக்கு கொங்கு நாட்டு சிங்கம் தீரன் சின்னமலையின் புகழையும் தியாகத்தையும் போற்றும் வகையில் சென்னை, கத்திபாரா, கிண்டி தொழிற்பேட்டையில் அமைந்துள்ள அவரின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளோம்.

கொங்கு சமுதாயத்தினர் அனைவரும் கொங்கு மாவீரனுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்நிகழ்ச்சியில் பெருந்திரளாகக் கலந்துகொள்ள வேண்டுமென்று அன்பு கலந்த உரிமையுடன் அழைக்கிறோம்.

| **BRT.சென்னியப்பன்** | **பரணி கே.பாலசுப்பிரமணி** | **ஆர்.செல்வராஜ்** |
|---|---|---|
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

மற்றும்
செயற்குழு உறுப்பினர்கள்

# படுகளம்

## அடுத்த சில நாட்கள்

சென்ற இதழ் தொடர்ச்சி ..... பேராசிரியர் ப.க.பொன்னுசாமி

ராமுப் பண்டாரம் செல்லச்சாமியின் மரணம் பற்றிய விவரங்களைக் கோயில் கவுண்டரிடம் சொன்னார்.

“நடக்கக்குடாதது நடந்து போச்சு,” கண்களில் நீர் மல்க முகத்தைக் கைகளால் மறைத்துக்கொண்டு அழுதார் கவுண்டர்.

“எனக்கு இந்த ஊர்ல இருந்த ஒரே ஆப்த சினேகிதர் செல்லச்சாமி. எப்பாவுது ஒருக்காப் பார்த்தாலும் எப்பவும் எங்கூடவே இருக்கற மாதிரிப் பேசுவாரு. அன்னிக்கித் திருமூர்த்தி மல போனப்பச் சொன்னாரு, ‘இப்பெல்லா நா, குடிக்கறத ரெம்பக் கொறச்சிட்டனுங்க’ ன்னு. ‘மெல்ல மெல்ல ஒட்டுக்கா விட்டறணும்’னு சொன்ன. பேசாமப் போனாரு. விட்றுப்பாருன்னுதா நெனச்ச. விட்டுத்தா இருப்பாரு. இன்னிக்கி அவரு உயிரக் குடியல்ல கொண்டு போயிருச்சுங்கறாங்க?” கவுண்டர் கலங்கிச் சொல்ல ராமுப் பண்டாரம் விக்கித்துக்கொண்டு நின்றார்.

“அவுரு உயிர நாந்தாம் புடிங்கியிருக்கறன் ராமு. எதுரும் புதுருமா இருந்த குடும்பங்கள ‘பழச மறந்து ஒத்துமையா இருக்கப் பாருங்க’ன்னு நாஞ் சொல்லப்போக, ரெண்டு பக்கமும் எறங்கி வந்து சேந்துதுக இப்ப..? எனக்குப் பிராயச்சித்தமே கெடையாது. உச்சிமாகாளியாத்தா எனக்குத் தண்டன குடுக்குட்டும்.”

“சாமீ” கதறிக்கொண்டு கவுண்டரின் கால்களைப் பிடித்து அழுதார் ராமுப்பண்டாரம்.

கோயில் கவுண்டர் அவரை மெதுவாகத் தூக்கி நிறுத்தி ஆசுவாசப்படுத்தினார்.

“ஏதோ ‘சதி’யின்னும் பேச்சு வந்திருச்சுங்க சாமி.”

“அப்பிடி இருக்காது ராமு. பன்னீர எனக்கு நல்லாத் தெரியும்! இப்ப நொடிஞ்சும் போயிட்டாரில்ல? அந்தளவுக்கப் போக அவுருனால முடியாதுன்னு நா நெனைக்கிற”.

“எதுக்கும் கூட இருந்த குப்பண்ண கவுண்டர நீங்க கூப்புட்டுக் கேட்டா முழுசாத் தெரியுமுங்க”

“அவர நாங் கூப்புட்டதாகக் கூட்டீட்டு வா! கேட்டுக்கற”.

“ஆகுட்டும்க சாமி” சொல்லிவிட்டு நந்தவனப் பக்கம் போனார் ராமுப் பண்டாரம்.

சாவு வீடுகளுக்கெல்லாம் நேரில் சென்று துக்கம் விசாரிப்பதை நீண்ட காலமாகவே

நிறுத்திக் கொண்டார் கோயில் கவுண்டர். இறந்து போனவர்கள் தனக்குத் தெரிந்தவர்களாகவோ அல்லது முக்கியமானவர்களின் இறப்புச் செய்தி காதில் விழுந்தாலோ - அவர்கள் ஆன்மாவுக்காக அவர் பிரார்த்தனை செய்து கொள்வார். செல்லச்சாமிக் கவுண்டரின் ஆன்மா சாந்தியடைய நீண்ட நேரம் பிரார்த்தனை செய்தார். பிரார்த்தனையின் ஊடேயும் ஒதுக்க முயன்றும் முந்திக் கொண்டு ஒரு நினைவு அவரை ஆட்கொண்டிருந்தது.

'சதீன்னு ராமு சொன்னது உண்மையா இருந்தாலும், பொய்யாப் போயி அத நம்பமுடியாம ஒரு சந்தேகமா நெலச்சுப்போனாலும் - சேரயிருந்த குடும்பங்க பகம மறுக்கா வலுத்துப் போகுமே!' தம் நினைவிலிருந்து அவர் விடுபட முடியவில்லை. 'பிரிஞ்சு நிக்கற சொந்த வளவுக்காரங்களயே ஒண்ணாச் சேக்க முடியாத நம்மனால வெவ்வேற சச்சரவுகள்ல வீராப்போட வெலகியிருக்கற மத்த வளவுக்காரங்களயும் எப்படிச் சேத்து நின்னுபோன உச்சி மாகாளியாத்தா கோயில் விழாவ நடத்தி-ஒத்துமயான ஊராப் பள்ளிபுரத்த நாம எங்க பாக்கப் போறது?' என்ற விரக்தி அவரைப் பற்றிக்கொண்டது.

செல்லச்சாமிக்கவுண்டரின் உடலடக்கம் எளிமையாக நடந்தது. அன்று மதியத்திற்குப் பின்னால் கருமாந்தரமும் சிறிய நிகழ்ச்சியாக முடிக்கப்பட்டது.

பன்னீர்க்கவுண்டர் வீட்டில் ஆரவாரமெல்லாம் நின்று போய்விட்டது. இரண்டொரு பெரியவர்களின் யோசனைப்படி அவர் குடுத்தினரையும் மற்ற நான்கைந்து தேவையான உறவினர்களையும் மட்டும் அழைத்துக்கொண்டு அமரப் பூண்டிக் குலதெய்வம் கோயிலுக்குப் போய் தன் மகள் பெரியநாயகியின் குழந்தைகளுக்குக் காது குத்திக்கொண்டு வந்துவிட்டார். காதுகுத்துச் சீர் நின்றுவிடுமோ என்று அஞ்சியிருந்த பெரியநாயகியும், அவள் அம்மாள் மாரியம்மாளும் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டார்கள்.

"நம்ம சீரப்பத்தானா இந்த அண்ணன் தண்ணியப் போட்டு சாகோணும்?", சலித்துக்கொண்டு பெரியநாயகி மாரியம்மாளிடம் சொன்னதைக் காதில் கேட்டுவிட்ட அவள் கணவன் பெரியதம்பி, "சீர வெச்சு செல்லசாமி மச்சான நீயும் உங்கொய்யுனுந்தாங் கொன்னீக," பொறுமையை இழந்து கத்தினான். நடுங்கிப்போன மாரியம்மாள், "தம்பீ அப்பிடியெல்லாஞ் சொல்லாதீக!" கொஞ்சியவாறு கேட்டாள்.

திண்ணையில் உட்கார்ந்திருந்த பன்னீர்க் கவுண்டருக்கும் தன்னாசிக் கவுண்டருக்கும் பெரியதம்பியின் தடித்த குரல் கேட்க, ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"தம்பியே போதும்க எதாச்சீம் சிக்கலக் கொண்டாந்தற", முணுமுணுத்தார் தன்னாசிக் கவுண்டர்.

"என்ன தப்புச் செஞ்சிருக்கறம் பயந்துக்க?" பதில் சொன்ன பன்னீர்க்கவுண்டரைத் தன் கடைக்கண்களில் பார்த்து விட்டு தனக்குள் சிரித்துக்கொண்டார் தன்னாசிக் கவுண்டர்.

கூத்தம்பூண்டி ஆத்தாள் குடும்பங்களைச் சந்தேகம் வாட்டி வதைத்த நிலையிலும், ஊர்ப்பெரியவர்கள் காதில் போட்டதற்கிணங்க அன்றே கருமாந்தரத்தை வைத்துவிட நல்லசாமிக்கவுண்டரும், கண்ணுச்சாமிக்கவுண்டரும், சுந்தரசாமியும் ஒத்துக் கொண்டார்கள். அழுது புலம்பிய நிலையிலும் பெரியதம்பி வீட்டுக் காதுக்குத்துச் சீரு நின்னுபோக வேண்டாஞ்சாமீக', ஆத்தாள் சொல்லி விட்டார்.

மதுரையிலிருந்து நட்புக்காக வந்திருந்த சோமுத் தேவரும் அவர் மனைவி கருப்பாயம்மாளும், ஒன்றுவிட்ட பேத்தி ராஜேஸ்வரியும் ஆத்தாவின் குடும்பத்தாருடன் ஒன்றிச்சோகத்தில் ஆழ்ந்திருந்தார்கள். இரண்டு நாட்களாகச் செல்லச்சாமிக்கவுண்டரின் குணங்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்ற சோமுத் தேவரால், அவர் இறந்துபோன இரவு இரண்டு மணி நேரம்தான் நேரில் நெருங்கிப் பழக முடிந்தது. 'அவருடன் நீண்ட காலப் பழக்கமில்லாமல் போய் விட்டதே" என்று வருந்தினார். பள்ளிபுரம் வந்து இரண்டு நாட்கள் கண்ணுச்சாமிக் கவுண்டரின் மகள்கள் முருகுவுடனும் செவ்வந்தியுடனும் பழகிய பழக்கத்தின் மகிழ்ச்சியும், மூத்த மகன் நல்லதம்பியை இரண்டு ஆண்டுகளாகத் தன் ஊரில் கண்டு வளர்த்துக்கொண்ட கனவுகளின் பசுமையும் ராஜேஸ்வரிக்குத் திடீரென்று அந்நியப்பட்டுப் போய்விட்டன.

"நாம வந்தப்ப இப்பிடி நடந்து போச்சுங்களே?" அங்கலாய்த்த கருப்பாயம்மாளைச் சமாதானப்படுத்த முடியாமல் நொந்து கொண்டார் சோமுத் தேவர்.

"பூடபுடிச்ச நாமெல்லாம் வரத்தா இப்பிடி நடந்திருக்குது," அழுதாள் ராஜேஸ்வரி.

"எல்லாரும் நல்லவங்கம்மா ! நம்மள அப்பிடி நெனைக்க மாட்டாக!" சமாதானப்படுத்தினார் தேவர்.

எல்லாரிடமும் சொல்லிவிட்டு சோமுத் தேவர் புறப்படத்தயாரானார். நல்லசாமிக் கவுண்டர் தேவரின் கைகளைப் பிடித்துக்கொண்டு கண்ணீர் விட்டார். தேவரின் கண்களிலும் நீர் கொட்டியது. சுந்தரசாமித் தேவரைக் கட்டிப்பிடித்து அழுதார். சின்னக்கண்ணுவின் அரவணைப்பில் ராஜேஸ்வரி கலங்கி நின்றாள். வள்ளியம்மாளைப் பார்த்துக் கண்ணீரில் வடிந்த நீரைத் துடைத்துக்கொண்டிருந்தாள் கருப்பாயம்மாள்.

வீதியில் வண்டியுடன் தயாராயிந்தான் பாலுச்சாமி. தேவரும், கருப்பாயம்மாளும், ராஜேஸ்வரியும் வந்து வண்டியில் ஏறிக் கொண்டார்கள்.

சோகமாக எல்லாரும் பார்த்திருக்க வண்டி புறப்பட்டது. தன் கைகளை ஆட்டி ராஜேஸ்வரியை வழியனுப்ப முடியாமல் மரம்போல் நின்றான் நல்லதம்பி.

கடைசியாக வண்டியில் ஏறி உட்கார்ந்து கொண்டார் கண்ணுச்சாமிக் கவுண்டர். தேவரும், கருப்பாயம்மாவும் கண்ணுச்சாமிக் கவுண்டரிடம் பரிவாகப் பேச்சுக் கொடுக்க வண்டி ரயிலடியை அடைந்தது.

ரயிலில் தேவர் குடும்பத்தை ஏற்றி அன்புடன் அனுப்பி வைத்துவிட்டு கண்ணுச்சாமிக் கவுண்டரும் பாலுச்சாமியும் பள்ளிபுரத்துக்குப் புறப்பட்டார்கள். வண்டியில் அமைதி இருந்தது. காளைகளின் காலடிச் சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. சோர்ந்த நிலையில் வண்டிக்கூட்டின் மெத்தை விளிம்பில் இடது கை தாங்கியிருக்கத் தலையைப் படிய வைத்து, வலது கையில் பின் கம்பியைப் பிடித்தவாறு கண்களை மூடிக்கொண்டு வண்டி அசைவில் குலுங்கிக் கொண்டிருந்தார் கண்ணுச்சாமிக் கவுண்டர்.

நினைவலைகளில் முப்பதாண்டுகள் மிதந்தன. தொடரும்....

❖❖❖❖

# மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | V.K.E.ஸ்ரீதர் |
| பிறந்த தேதி | : | 27-02-21979 |
| பிறந்த ஊர் | : | கோவை |
| படிப்பு | : | பல் மருத்துவத்தில் மேற்படிப்பு<br>P.D.S.சென்னை<br>Speciality Periodontics, USA |
| நட்சத்திரம் | : | சதையம் |
| ராசி | : | |
| லக்கினம் | : | |
| சொந்த ஊர் | : | கோவை |
| தந்தை | : | V.K.ஈஸ்வரன் |
| தாயார் | : | E.கௌசல்யா, ஈஸ்வரன் |
| தொழில் | : | விவசாயம், தொழில் |
| உடன்பிறந்தோர் | : | அண்ணன் ஒருவர் மட்டும் |
| அலைபேசி | : | 9444075878 |

❖❖❖❖

# குழந்தை உளவியலும் மனிதமனமும் அன்புகாட்டுதல்

சென்ற இதழ் தொடர்ச்சி ..... பத்மஸ்ரீ பெரியசாமி தூரன்

உள்ளத்திற்கும் உடலுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதை இன்று வைத்தியர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஒருவனுக்கு வியாதி கண்டு நிலைமை நெருக்கடியாக மாறுகின்ற காலத்திலும், 'அவன் குணமடைவான்; வாழவேண்டுமென்ற தீவிர உணர்ச்சியோடு அவன் நோயைச் சமாளித்துக்கொண்டிருக்கிறான்" என்று வைத்தியர்கள் கூறுகிறார்கள்.

மனம் உடம்பைப் பாதிக்கிறது என்பதைச் சாதாரணமாகவும் நாம் காண்கிறோம். பய உணர்ச்சி தோன்றும் போது இருதயம் வேகமாக அடிக்கிறது; மேலெல்லாம் வேர்த்துப் போகிறது; சில சமயங்களில் பேசக்கூட முடிவதில்லை. கவலை வந்த காலத்தில் பசி உண்டாவதில்லை இவையெல்லாம் சாதாரண அனுபவம்.

சில பெற்றோர்கள் சாதாரண காலத்தில் தங்கள் அன்பை அதிகம் குழந்தையிடம் காட்டமாட்டார்கள் ஆனால் குழந்தை பிணியுற்றால் அப்பொழுது அளவில்லாத அன்பு காட்டுவார்கள், அதிகக்கவலையும் படுவார்கள் இம்மாதிரி நிலைமையில் குழந்தை தாய் தந்தையர் தன்மேல் அதிக அன்பு காட்டவேண்டும் என்பதற்காகவே தன்னையும் அறியாது நோய்வாய்ப்பட ஆரம்பிக்கும்.

உணவு உட்கொள்ளவில்லையே என்று பெற்றோர் கவலைப்படுவதை அறிந்தால் குழந்தை உணவு உட்கொள்ள ஒவ்வொரு தடவையும் தொந்தரவு கொடுக்கும். தன்னைப்பற்றிப் பெற்றோர் கவலைப்படுவதில் அதற்கு அத்தனை திருப்தி.

குளிர்காலத்தில் ஜலதோஷம் பிடித்துக்கொள்ளுமே என்று சில தாய்மார்கள் அதிகக் கவலைப்பட்டுக்கொண்டு குழந்தைகளைத் திறந்தவெளியில் போகாமல் தடுக்கிறார்கள். கம்பளி உடைகளை ஏராளமாக அணிவிக்கிறார்கள்.இவையெல்லாம் அவசியமில்லை. ஓரளவு ஜாக்கிரதையாக இருக்கவேண்டியததுான். ஆனால் குழந்தைக்கு அடிக்கடி கம்பளி உடைகளே தேவையில்லை. நமது நாட்டுச் சீதோஷ்ண நிலைமைக்குச் சாதாரணப் பஞ்சாடையே போதும். இதை அறியாமல் வீண் கவலைப்படுவதாலேயே குழந்தை பிணி அடைய நேரிடும்.

குழந்தைகள் திறந்த வெளியில் ஓடியாடி விளையாடவேண்டும். திண்ணையிலிருந்து கீழே விழுந்து விடுமோ, வேறு விதமான தீங்கிற்கு உள்ளாகுமோ என்று சதா பெற்றோர் நினைத்துக்கொண்டிருப்பதாகக் குழந்தை உணர்ந்தால் அதன் இயல்பான வளர்ச்சி குன்றிவிடும்.

இம்மாதிரி அன்பினால் ஏற்படும் கெடுதல்களைப் பற்றிச் சொல்லும்போதே அறிஞர்கள் அன்பின் அவசியத்தைப்பற்றியும் பேசுகிறார்கள். அன்பினாலேயே குழந்தை வளரவேண்டும் என்கிறார்கள். அன்பினாலேயே குழந்தை வளரவேண்டும் என்கிறார்கள். அதை மிரட்டுவதோ அடிப்பதோ கூடவே கூடாது என்கிறார்கள். அன்பு சிறிது அளவுகடந்து போனாலும் சரி, குறையக்கூடாது என்று வற்புறுத்துகிறார்கள். மிரட்டி அடக்கிக் குழந்தைகளின் உள்ளத்தில் மிகுதியான குழப்பத்தையும் அந்தரங்க மனத்தில் பல கோளாறுகளையும் உண்டாக்கி விடக்கூடாது என்றும் சொல்லுகிறார்கள்.

குழந்தையிடம் நாம் சரியானபடி நடந்துகொண்டால் அதை மிரட்டவோ அடிக்கவோ அவசியமே இல்லை. அதற்கு நம்மிடத்தில் நம்பிக்கையும் பிரியமும் உண்டாகும்படி செய்யவேண்டும். அப்பொழுது நாம் தவறு என்று சொல்வதை அது செய்ய விரும்பாது.

இன்று எனக்கு வேலையில்லை. அதனால் சரோஜா மேஜைமேல் ஏறுவதை நான் தடுப்பதில்லை. அவளோடு விளையாடுகிறேன். நாளைக்கு எனக்கு வேலை மிகுதியாக இருக்குமானால் அவளை மேஜைமேல் ஏறக்கூடாது என்று சொல்கிறேன். அவளுக்கு ஒன்றும் புரிவதில்லை. மேஜைமேல் ஏறுவது தவறாக இருந்தால் என்றும் அப்படி இருக்கவேண்டும் அல்லவா? பிறகு அவள்மேல் கோபிப்பதில் என்ன லாபம்?

சில பெற்றோர்கள் இப்படித் தங்களுக்குப் பிரியமாக இருக்கும் போது சில விஷயங்களை அனுமதித்துவிடுவார்கள். மற்றொரு சமயம் அவற்றிற்காகவே குழந்தையைக் கண்டிப்பார்கள். இப்படிச் செய்தால் குழந்தை கலக்கமடைகிறது. பெற்றோரிடமும் நம்பிக்கையை இழக்கிறது.

இவற்றையெல்லாம் உணர்ந்து பெற்றோர்கள் நிதானத்தோடும் தன்னடக்கத்தோடும் குழந்தையிடம் அன்பும் ஆதரவும் காட்டி அதை வளர்க்கவேண்டும்.

தொடரும்....

❖❖❖❖

# வானம் தொடலாம் வாங்க

சிந்தனைக் கவிஞர் கவிதாசன்

**வெற்றி பெற்ற மாணவர்கள் என எப்படி பெயர் எடுப்பது ?**

'எமக்குத் தொழில் கவிதை' என்றார் மகாகவி பாரதி. அது போல் மாணவர்களது தொழில் கற்றல். ஆகவே கல்வியை ஆர்வத்துடனும், எதிர்கால இலட்சியத்துடனும் கற்க வேண்டும். அத்துடன் ஒழுக்கம் என்பதை உங்கள் வாழ்க்கையின் கோட்பாடாகக் கொள்ளுங்கள்.

ஒரு நதி தனது நீரோட்டத்தை முறையாகத் தொடர கரைகள் அவசியம். ஒழுக்கம் என்பது வாய்க்காலுக்குத் தேவைப்படும் கரைகள் போன்றது. கரைகள் வாய்க்காலுக்குத் தடைகள் அல்ல. அவை நீரை நெறிப்படுத்தும் ஒழுங்குக் கட்டுப்பாடு!

ஆசிரியர் அல்லது பெற்றோர் போன்றவர்கள் தங்களது அறிவையும் அனுபவத்தையும் நமக்கு ஊட்டி நாம் சிறக்க உதவுபவர்கள், அவர்கள் நம்மை செதுக்குவது சிலை வடிக்கவே ! அவற்றை ஏற்றுக்கொண்டு முன்னேறுங்கள்.

வணங்குங்கள் - வளரத் தொடங்குவீர்கள்
பாராட்டுங்கள் - பழகத் தொடங்குவீர்கள்
நன்றி செலுத்துங்கள் - நல்ல மனிதர் ஆவீர்கள்
உழையுங்கள் - உயர்வடைவீர்கள்

**சின்ன பிரச்சனைகள் கூட என்னை முடக்கி வைத்து விடுகின்றன. எப்படி மீண்டு வருவது?**

எந்தப் பிரச்சினைக்கும் முடங்கிக் கிடப்பது தீர்வு அல்ல. 'முடங்கிக் கிடந்தால் சிலந்தியும் உன்னைச் சிறை பிடிக்கும், எழுந்து நடந்தால் எரிமலையும் உனக்கு வழி கொடுக்கும்' என்ற மந்திரத்தை மனதில் கொள்ளுங்கள். செத்த மீன்கள் நீரோட்டம் போகும் பாதையில் அடித்துக்கொண்டு போகும். உயிருள்ள மீன்கள் நீரோட்டத்தை எதிர்த்துச் செல்லும். எந்தப் பிரச்சினையையும் எண்ணி மலைத்து நிற்காமல் அதற்கு எவ்விதம் தீர்வு காணலாம் என்பதைப் பட்டியலிட்டு செயல்படுங்கள். உங்கள் பிரச்சினை உங்களது பலம் ஆக மாறும். எண்ணிப்பாருங்கள்! ஒரு காலத்தில் இந்தியாவின் பெரும் பிரச்சினையாக இருந்த மக்கள் தொகை இன்று மிகப்பெரும் பலம் ஆகிவிட்டது.

போட்டியைச் சந்திக்காதவன் சிறந்த விளையாட்டு வீரன் ஆவதில்லை. அதுபோல பிரச்சினையைச் சந்திக்காதவன் சிறந்த சாதனையாளன் ஆவதில்லை.

**தோல்வியடையாமல் இருப்பது எப்படி?**

நீங்கள் பல்லாயிரம் முறை தோல்வியடையலாம். ஆனால் உங்களுடைய தோல்விக்குப் பிறரைக் குறைகூறாத வரையில் நீங்கள் தோல்வியடைந்தவர் அல்ல! நீங்கள் பிறந்துள்ளது வெல்வதற்கே தவிர, தோல்வியைச் சந்திக்கவோ அல்லது தோல்விக்கான காரணங்களைச் சொல்லுவதற்கோ அல்ல.

நீங்கள் பிறக்கும்போதே உங்களுடைய வெற்றிக்கான தேவைகள் இயற்கையாகவே உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை விதை வடிவில் இருக்கின்றன. அவற்றை உழைப்பு என்ற நிலத்தில் ஊன்றி, முயற்சி என்ற நீரைப்பாய்ச்சி, களைப்பு என்கிற களையை நீக்கினால் வெற்றி கனியைப் பறிக்கலாம். ஒருமுறை முயல்வதல்ல முயற்சி ! எண்ணியதை அடையும் வரை முயல்வதே முயற்சி.

உண்மையில் தோல்வி என்பது ஒத்திப் போடப்பட்டுள்ள வெற்றி. முயலுங்கள்! வெல்லுங்கள்! வெற்றி ஒருவரை வெளி உலகிற்கு அடையாளம் காட்டுகிறது. ஆனால் தோல்விதான் அவரை அவருக்கே அடையாளம் காட்டுகிறது.

**எந்த வயது வரை கற்க வேண்டும்?**

கல்விக்கு வயது ஒரு தடையல்ல. இதுவரையில் எந்த மரமும் வானைத் தொட்டதில்லை. அதுபோல அனைத்தையும் கற்று முடித்தவர் எவருமில்லை. தொடர்ந்து கற்றுக்கொண்டே இருந்தால்தான் நாம் தொடர்ந்து வெற்றி பெற இயலும். நேற்றைய பட்டதாரி இன்று படிப்பதை நிறுத்தினால் நாளை கல்லாதவர் ஆகிவிடுவார். இன்றைய கல்வி உலகில் தொலைதூரக் கல்வி முறை ஒரு வரம். எனவே நமது வசதி வாய்ப்பு இடம் கொடுக்கும் வரை படித்துவிட்டு பணிக்குச் சென்றவாரே கற்கலாம்.

நாம் ஏற்றுக்கொண்ட பணியினை மென்மேலும் செம்மையாகச் செய்திட அவசியமான கல்வியைத் தேர்ந்தெடுத்துப் படிப்பதன் மூலம் வெற்றிப்படிகள் ஒவ்வொன்றாய் ஏறலாம். தினமும் ஒரு புது கருத்தையாவது நாம் கற்றுக்கொள்ள வேண்டும். புதிய மேம்பாடான பண்புகளைக் கற்றுக்கொள்வதற்கும் மிகச் சரியான முறையில் சிந்திப்பதற்கும், பழுத்த பக்குவமான சொற்களைச் சூழ்நிலைக்கு ஏற்ப பயன்படுத்தி வெல்லவும் கற்றுக்கொண்டே இருங்கள். கல்விக்குக் கரையில்லை, கற்பதற்கு வயதில்லை.

**ஆசிரியர்களை எவ்வாறு மதிக்க வேண்டும்?**

சாதாரணக் கல்லை அழகிய சிற்பமாக்கிக் கொடுக்கிறார் சிற்பி. அச்சிற்பத்தைக்

கோயிலின் கற்பக்கிரகத்தில் வைத்து எல்லோரும் வழிபடுகின்றோம். மேலும் அதற்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன. அதுபோலத் தான் ஒரு சாதாரண மாணவனைச் செதுக்கி அறிவுக்கண்ணைத் திறந்து அவனை ஜொலிக்கச் செய்கின்றார்.

ஆசிரியரைச் சந்திக்கவில்லை என்றால் வெறும் முட்டாளாகத் தான் நான் இருந்து இருப்பேன். உங்களுடைய கேள்விக்குப் பதில் அளிக்கும் அளவுக்கு என்னை உயர்த்திய அத்துணை ஆசிரியர்களுக்கும் நான் என்றென்றும் நன்றிக்கடன் பட்டவன்.

ஆசிரியர்களை வணங்கத் தொடங்கும்போது நாம் வளரத் தொடங்குகிறோம். ஏனென்றால் ஆசிரியர்களின் வாழ்த்தும், ஆசீர்வாதமும் நமது வளர்ச்சிக்கு விதையாகவும் உரமாகவும் அமைகின்றன. ஆசிரியர்கள் பாராட்டும்படியாக எப்பொழுதும் நல்ல செயல்களையே செய்ய வேண்டும். ஏனென்றால் நற்செயல்கள் மூலமே ஆசிரியர்களுக்கு நம்மால் நன்றி செலுத்த முடியும்.

பூத்துக்குலுங்கும் மலர்கள் மூலமாகவும், சுவை மகுந்த கனிகள் மூலமாகவும் தன்னை வளர்த்தவர்களுக்கு நன்றி செலுத்தும் வண்ணச் செடிகளைப் போல், கனிமரங்களைப் போல், தமது செயல்கள் மூலம் ஆசிரியர்களுக்கு நன்றி செலுத்துபவரே நல்ல மாணவர். படிப்பிலும், பண்பாட்டிலும், ஒழுக்கத்திலும், உழைப்பிலும் உயர்ந்து விளங்குவதே ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் உண்மையான மதிப்பாகும்.

**தினமும் மகிழ்ச்சியாக இருப்பது எப்படி**?

மகிழ்ச்சியாக இருப்பதற்கு எளிமையாக வழி ஒன்று இருக்கின்றது. அதுதான் உழைப்பு. வேகமாகப் பறந்து கொண்டு இருக்கும் தேனீக்குக் கவலைப்பட நேரமேது? அதுபோல் உழைத்துக்கொண்டே இருக்கும் மனிதனுக்குக் கவலைப்படக் காலமேது?

ஆகவே, உழைப்பதில் மகிழ்ச்சி காணுங்கள். உழைக்கும்போது நாம் மட்டும் உயர்வதில்லை, பிறரையும் உயர்த்துகின்றோம். உழைப்பதன் மூலம் எதிர்காலத்தை வளமுடையதாகவும், நிகழ்காலத்தைப் பொருளுடையதாகவும், இறந்த காலத்தை இன்பம் உடையதாகவும் ஆக்க முடியும். ஆகவே முக்காலத்திற்கும் பொற்குவியலைக் கொடுக்கும் உழைப்பில் மூழ்குங்கள், கவலைகள் பறக்கும் ! மகிழ்ச்சி உங்களை நோக்கிச் சிறகினை விரிக்கும்.

அத்துடன் தியாகம் செய்யவும், மன்னிக்கவும், விட்டுக்கொடுக்கவும், நன்றி செலுத்தவும் கற்றுக்கொண்டு அவற்றையெல்லாம் வாழ்க்கையில் கடைப்பிடித்தால் மகிழ்ச்சி உங்களுடைய உள்ளத்தை இல்லமாக்கிக் கொள்ளும்.

**பரந்த மனப்பான்மையை ஏன் வளர்த்துக்கொள்ள வேண்டும்?**

பொதுவாக மூன்று விதமான மனப்பான்மை உடையவர்களை நடைமுறை வாழ்க்கையில் பார்க்கலாம். 1 தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற அகந்தை (Egoistic) உள்ளவர்கள். 2. தனக்கு ஒன்றும் தெரியாது, தான் எதற்கும் தகுதியற்றவன் என்ற தாழ்வு (Inferiority) மனப்பான்மை கொண்டவர்கள். 3. ஒவ்வொருவருக்கும் ஏதாவது தெரியும், ஒவ்வொருவரும் ஏதாவது ஒருவிதத்தில் சிறந்தவர் என்ற பரந்த (Openmindness) மனப்பான்மை பெற்றவர்கள்.

அகந்தை மனப்பான்மையும், தாழ்வு மனப்பான்மையும் நமது முன்னேற்றததிற்குக் குறுக்கே நிற்கும் தடைக்கற்கள். அவற்றைத் தகர்ந்தெறிந்து விட்டு பரந்த மனப்பான்மையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

❖❖❖❖


# SREE AP

**KONGU NUMEROLOGY VAASTHU RESEARCH CENTRE**

கொங்கு சொந்தங்களுக்கு

நியூமராலேஜி வாஸ்து

பிறந்த குழந்தைகளிலிருந்து பெரியவர்கள் வரை (நியூமராலேஜி) அதிர்ஷ்ட பெயர் அமைத்து சான்று கொடுக்கப்படும். மற்றும் புது வீடுகட்டுவதில் இருந்து பெரிய கம்பெனிகள் வரை வாஸ்த்து சாஸ்திரப்படி அமைத்து பிளான் போட்டு கொடுக்கப்படும். போன் செய்து முன் அனுமதி பெற்று வரவும்.

Contact :
Cell : 94440 47355, 94444 77459

**A.P.ARUEL KANNAN,** Proprietor
Plot No.18 & 19, Mangayarkarasi Cross Street, Santhosh Nagar, Extn.,
Near Swamy School, Madanandapuram,
Porur, Chennai - 600 116. Tamilnadu

(ADVT)


❖❖❖❖

# உழவனின்றி உலகில்லை

பி.எஸ்.கே.செல்வராஜ்

கொங்கின உழவனே ! ஒருகணம் யோசி !

உலகம் இயங்க உழவனின் பங்கு அதிகம். உழவனே! இந்த உலகம் நிலைத்து நிற்க நீ மிக மிக அவசியம், உலகம் உன்னைச் சுமக்கவில்லை. உலகத்தை நீ சுமக்கிறாய். உழவனே! உனது உற்பத்திகளினால் உலகம் செழிப்பினிலே. உனது ஏர்ப்படை நின்றால் பாரதத்தின் போர்ப்படை கூட நின்றுவிடுமடா! உனது ஏர்ப்படையால் நாட்டில் பல தடைகள் தகர்க்கப்படுகின்றன. உலகத்தில் உள்ள வளங்கள் அனைத்தும் இப்பூமியில் இருந்தே எடுக்கப்படுபவைதான். அப்பேற்பட்ட அனைத்து வளங்களும் அடங்கிய பூமி, உழவனாகிய உன் கையில். உனது உற்பத்தி நின்றுவிட்டால் உலகம் இயங்குவதில் கூட தடை ! போயஸ் தோட்டம் பொய்யோ, உண்மையோ, நாட்டிற்குத் தேவையோ இல்லையோ, ஆனால் உனது தோட்டம் நாட்டிற்கு மிகவும் தேவையடா, இது உண்மையடா !

வாஜ்பாயும், பீச்பாயும் மாறினாலும் உன் வருமானம் உயர வில்லையே! உன் தலைவிதி மாறவில்லையே! நரசிம்மராவ் போய் வாஜ்பாய் வந்தும். வாஜ்பாய் போய் மன்மோகன்சிங் வந்தும் குப்பனுக்கும் சுப்பனுக்கும் கூரைவீடு தானடா! இது ஏனடா?

கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை வாழும் ஏழை மக்களுக்கு கஞ்சிக் கலயம் தானடா! கலைஞர் போய் ஜெயலலிதா வந்தும், ஜெயலலிதா போய் கலைஞர் வந்தும், கரும்பு விலை ஏறுச்சா? இல்லையே! நம்மைக்கண்டுகொள்ள நாதி இல்லையடா! இதுக்குத்தான் நம்மாள் ஒருவர் முதல்வரா ஆகவேண்டும் என்பதுடா ! நீ யோசித்தாயா ? பொதுக்கட்சிகளை நம்பி ஏமாந்து கடைசியில் உன் மீசையும் தாடியும் நரைத்தது மட்டுமல்லாமல் ஆசையும் நரைத்ததடா !

அரசியல்வாதிக்கு அன்று மட்டும் உண்ணாவிரதம் தானடா !

ஏழை மக்களுக்கோ என்றும் உண்ணாவிரதம் ஏனடா !

நேபாள (ம்) புரம் முதல் கோபாலபுரம் வரை ஊழல் தானடா ! இதுதான் இன்றைய இந்திய அரசியலடா ! இந்தியா இப்படியே லஞ்சமும் ஊழலும் அநீதியோடும் வளர்ந்து கொண்டே வந்தால் சிரபுஞ்சியிலும் மழை நின்றுவிடுமடா !

உன் விவசாயம் நின்று விட்டால் நாட்டில் விஞ்ஞானமும் நின்றுவிடுமடா

ஆண் பெண்ணைச் சார்ந்தோ, பெண் ஆணைச் சார்ந்தோ, தாய் பிள்ளையைச்

சார்ந்தோ, பிள்ளைகள் தாயைச் சார்ந்தோ, சூரியன் பூமியைச் சார்ந்தோ, வானம் பூமியைச் சார்ந்தோ, பூமி வானத்தைச் சார்ந்தோ, காதலன் காதலியைச்சார்ந்தோ, காதலி காதலனைச் சார்ந்தோ, கணவன் மனைவியைச் சார்ந்தோ, மனைவி கணவனைச் சார்ந்தோ, தலைவன் தொண்டனைச் சார்ந்தோ, தொண்டன் தலைவனைச் சார்ந்தோ, உயிர் உன்னைச்சார்ந்தோ, உன்னை உயிர் சார்ந்தோ இல்லையோ, ஆனால் உலகம் உன்னைச் சார்ந்ததுதானடா !

ஒரு கணம் சிந்தித்தால் வைரத்தின் மதிப்பை விட உன் வயலின் மதிப்பு அதிகமடா, வங்கக்கடலில் புயல்நின்றும் நாட்டில் வறுமை ஏனடா! அரசாங்க அதிகாரிகளை விட்டு அரசியல்வாதிகளின் கைகளில் அதிகாரம் ஏனடா! பாபிலோனின் தொங்கும் தோட்டத்தை விட நமது பார்மரின் தோட்டம் அதிசயமானதடா !

உனது வயல்வெளிப் பயணம் நின்றுவிட்டால் அனைவரும் பட்டினியால் சொர்க்கரதப் பயணம் தானடா ! உனது வயல்வெளிப் பயணம் நின்றிருந்தால் இந்தியனின் அயல்வெளிப் பயணம் ஏதடா! நான் ஏன் கோவணம் கட்ட வேண்டும் என்று நீ நினைத்தால் உலகமே அம்மணம் ஆகிவிடுமடா! (உலகம் பட்டாடை உடுத்துவது நின்றுவிடுமடா!) பாரினில் உனது பங்கு அதிகமடா! உலகம் சுற்ற உழவனின் கைகள் தேவையடா! விஞ்ஞானத்தைவிட விவசாயம்தான் நாட்டிற்கு முதல் தேவையடா! இப்படி இருந்தும் உனக்குள் ஒரு அஞ்ஞானம் ஏனடா!

ரயில் வர தாமதம் ஆகுதடா! உனது பயிர் வர பாரினில் தாமதம் இல்லையடா! காந்தி விரும்பிய கதர் ஆடை இளைஞர் நீயடா! விவேகானந்தர் கேட்ட விஞ்ஞான இளைஞன் நீயடா! கார் பிடிப்பவனது கை சுகாதாரக் கேடு விளைவிக்குதடா! ஏர் பிடிக்கும் உனது கை சுற்றுலா மையம் அமைக்குதடா !

நாட்டில் உள்ள மரம், செடி, கொடி, மலைகளை விட நமது இனம் அதிகமடா! நாட்டில் உள்ள மலைகளை விட உயர்ந்து நிற்பது உழவனின் கொங்கினம் தானடா! இமயம் தொடுவது நமது கொங்குதானடா! நம் இனம் ஒன்றாகக் கூடிநின்றால் எவரெஸ்ட்டும் நம்மிடம், நம் இனத்திடம் தோற்றுவிடுமடா! உலகளவு உள்ளது நமது இனம் ஒன்றுமட்டும் தானடா! நம் இனம் ஒன்றாகக் கைகோர்த்து நின்றால் சீனப்பெருஞ்சுவரும் நம்மைக் கண்டு வியக்குமடா! நம் கொங்கு ஒன்றாகக் கூடி, ஒன்றாக நிற்க இந்தப் பாரினில் இடம் எங்கும் இல்லையடா!

கவியரசு வைரமுத்துவிற்கும் உன் சேற்று வயலாடி நாற்று நட ஆசையடா! அவர் சிந்தனைகளில் கூட உன் வயல் வெளி விசயங்கள் தானடா! எடுத்துக்காட்டாக ‘காற்றோடு

தென்னை அசைகின்ற ஓசை ரீங்கார சங்கீதம்' என்ற இப்பாடல் வரிகள் விளக்குதடா! உனது ஏர் முனை ஒடிந்தால் உலகத்திற்குப் போர் முனைதானடா! பாக்கியராஜீம், பாராதிராஜாவும், கஸ்தூரி ராஜாவும் மற்றும் உள்ள பல ராஜாக்களும் சாப்பிட இலைபோடும் முதல் அதை மூடும் வரை உன்னில் அடங்கியுள்ள பல கலாச்சாரங்களில் தான் புகழ்பெற்றதடா! இது உண்மையடா! கவரிமான் பரம்பரையை விட நம் கவுண்டர் பரம்பரை கவுரவம் படைத்த வரலாற்றுப் பரம்பரையடா! உலகப் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு உனக்கடா! முப்படையை விட உன் ஏர்ப்படை மேலடா! ஏர்பிடித்தும், பார் பிடித்தும், மம்முட்டி எடுத்தும், சம்முட்டி எடுத்தும், மரம் நட்டும் உன் கைகளின் கைரேகை இன்னும் மாறவில்லையே, இது ஏனடா?

சனிப்பெயர்ச்சி போய் குரு பெயர்ச்சி வந்தும் உனக்குத் தொல்லை தானடா! கபில்தேவுக்கும் டெண்டுல்கருக்கும் நீ கேப்டனடா! அவர்கள் மைதானம் செல்ல (மரம்) மட்டை கொடுத்தது நீயடா! அவர்கள் கிரவுண்டில் விளையாட உனது கிரவுண்டில் விளையும் மரம் தேவையடா! கிரிக்கெட்டில் ஊழல் நடக்குதடா! உனது ஜல்லிக்கட்டில் ஊழல் இல்லையடா! இது உண்மைதானடா! உழவனின் மகன் வாங்கித் தந்த உலகக்கோப்பை தானடா! கபில்தேவ் **(1983)** இல்லையென்றால் ஏதடா! உலகத்தின் அஸ்திவாரமே நீயடா! வளர்ந்து நிற்கும் சுவர்கள் எல்லாம் உன்மீது கட்டப்பட்ட சுவர்கள் தானடா! உலக வளர்ச்சிக்கே தகப்பன் நீயடா !

நெல்சன் மண்டேலாவையும், மைக்கேல் ஜாக்சனையும், மைக்டைசனையும் பாராடா! பில் கிளின்டனையும், பில் கேட்சின் வாழ்க்கை வரலாற்றையும் எண்ணிப்பாரடா! பின்பு உனக்குள் தாழ்வு மனப்பான்மை ஏதடா! இவ்வளவு இருந்தும் நம்மால் முடியாதது என்று ஏன் எண்ணுகிறாய்? கொங்குப்படை தோற்குமானால் எப்படை வெல்லுமடா?

கொங்கினத்துடன் ஒன்றுபட்டு விழிப்புணர்ச்சியுடன் உழைத்துப்பாரடா! பின் உனக்கு உலகக்கோப்பை தானடா! தலைவன் போய்த் தலைவி வந்தும், தலைவி போய்த் தலைவன் வந்தும் உனக்குத் தலைவலி தானடா! இது ஏனடா?

தனுசு ராசியாக இருந்தும் தடைகள் ஏனடா உனக்கு? உன் முன்னேற்றத்திற்கு? ஜப்பானினும், இஸ்ரேலிலும் உன் தொழில்தானடா! உலகத்திற்கு உணவு கொடுத்து உப்பிடும் வள்ளல் நீயடா! உலக வளர்ச்சிக்கு உன் போன்றோர் தேவையடா! கடலளவு நீர் இருந்தாலும் ஒருவரது தாகத்திற்கும் உதவாதடா! கையளவு உள்ள உன் மணற்கேணி அனைவரது தாகத்தையும் உலகில் தீர்க்குமடா! வணிகத்திற்கும் வர்த்தகத்திற்கும் முன்னோடி நீயடா!

❖❖❖❖

## ஒரு கொங்கு நண்பரின் இரங்கல்

கொங்கு நண்பர்குழுவில் கோபுரமாய் விளங்கி
எங்கும் புகழ்பரவ ஏற்றத்தைக் கொடுத்தாயே!
முன்னோர் பாதையில் முன்னேற்றம் காணமுயன்ற
மோகனின் பயணத்தை முடக்கிவிட்டானே காலன்.
விவசாயி உள்ளத்தில் விழிப்புணர்ச்சியை விதைத்து
விசுவாச கரம்நீட்டி விழா எடுத்தாரே!
சேவை மனப்பான்மையை செம்மைப் பெறச்செய்து
சாவை நோக்கி சாய்ந்து விட்டாரே!

ஏற்றுக்கொள்ள மனமில்லை இறைவன்வகுத்த நியதியை !
தேற்றிக்கொள்ள மனதிற்கு அந்த ஈஸ்வரன்தான் வரவேண்டும் !
காலத்தின் கணக்கால் கண்டெடுத்த மோகனை
இழந்துவாடும் குடும்பத்திற்கு இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்
ஆசிரியர் ஆர்.பெரியசாமி, கீரனூர், இராசிபுரம்

## இரங்கல் கவிதை

சூரியன் கூரிய வெளிச்சம்
தந்தாலும்
நிலவு நிகரற்ற குளிச்சியைத்
தந்தாலும்
கொடையில் சூரியனையும் நிலவையும்
தாண்டியவர்
எங்கள் தலைவர் அல்லவா?
கடல்அலைகள் ஓயலாம்
ஆனால் கடலுமா ஓய்ந்துவிடுவது?
நட்சத்திரம் பிரகாசிக்க மறக்கலாம்
ஆனால் வானமுமா துயில்வது!

கூடை கூடையாய் மின்னும்
நட்சத்திரக் கூட்டமல்லவா
எங்கள் கொங்கு நண்பர்கள் சங்கம்
அந்த நட்சத்திரக் கூட்டத்தில்
சூரியன் தானே பெருமை மிக்கது
ஆனால் இன்று அந்த
சூரியன் கொங்கு நண்பர்கள்
சங்கத்தில் இல்லை
கொங்கு குலச் சூரியனே - நீ
எங்களைவிட்டுப் பிரிந்துவிட்டாய்
அதுவும் பார்வையில் தான்
எங்கள் நினைவுகளிலிருந்து அல்ல
உங்கள் நீங்காத நினைவுகளில்
நனைத்து விட்டாய்
நனைந்தும் விட்டோம் நாங்கள் !

இங்ஙனம்
க.நாச்சிமுத்து, கொடுமுடி

## வாழ்த்துகிறோம்




கரூர் வட்டம், திருமுடிகவுண்டனூர், வெள்ளியனை கிராமம், திரு. செல்லப்பகவுண்டர், திருமதி செல்லம்மாள் ஆகியோரின் மகனும், நமது சங்கத்தின் மூத்த உறுப்பினருமான மணியகுல திருமகனார் திரு.செ.நாகல்சாமி I.A. & A.S. அவர்கள் முதன்மை கணக்காய்வுத்தலைவராக (Principal Accountant General (Civil Audit) Tamil Nadu &Puducherry) ஆக பதவி உயர்வு பெற்றுள்ளார் என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம். கொங்கு சமுதாயத்தில் இருந்து இப்பதவியை வகிக்கும் முதல் நபர் என்ற பெருமைக்குரியவர் ஆவார். இதற்குமுன் இவர் தமிழக மின்சார வாரியத்தில் கணக்கியல் உறுப்பினராகவும் (Accounts Member, TNEB), கேரள மாநில முதன்மை கணக்காய்வுத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். இவரது குடும்பம் மனைவி மற்றும் இரு மகள்கள் அடங்கியது.

கொங்கு சமுதாயத்தைச் சார்ந்த நமது நண்பர் இப்பதவி உயர்வு பெற்றுள்ளது நமக்கெல்லாம் பெருமை சேர்ப்பதுடன், நமது இளைய தலைமுறைகளுக்கு வழிகாட்டுதலுமாகவும் அமையும். இவர் இப்புதிய பதவியில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு சாதனைகள் படைக்க சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



கோவை இராமகிருஷ்ணா வித்யாலயாவில் கடந்த பிப்ரவரி 3ம் தேதி அன்று சிறந்த முன்னாள் மாணவர் விருதினை சிந்தனைக் கவிஞர் கவிதாசன் அவர்களுக்கு சுவாமி ஆத்மாராமானந்தர் அவர்கள் வழங்கினார்.

தமிழ் இலக்கிய உலகில் கொங்கு சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துவரும் சிந்தனைக் கவிஞருக்கு கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

# திருமண மாலை

"கொங்கு திருமணமாலை"
திருமணத்தகவல் மையம், சென்னை

மணமகள் தேவை :

1. பெருங்குடி கூட்டம், பூர்வீகம் நாமக்கல் , 28, B.E., M.S., 5'10'' சிகப்பு அனுசம் 2, செவ்வாய் இல்லை, சென்னையில் தந்தையுடன் சொந்தக்கட்டுமான நிறுவனம், 1 தம்பி; படித்த வேலையில் இல்லாத பெண் தேவை.

2. கண்ணன் கூட்டம், பூர்வீகம் திருச்செங்கோடு, 35, B.Sc., MPG, LLB., 6 அடி சிகப்பு பூராடம் செவ்வாய் இல்லை; 1 தம்பி, டெல்லியில் Programmer to Ministers & Industrialists- தகுதியான படித்த பெண் தேவை.

3. செங்கண்ணன், பூர்வீகம் ப.வேலூர் 36, M.Com., M.Phil., 6 அடி சிகப்பு அஸ்தம், செவ்வாய் இல்லை, சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை, மறுமணம் செய்து கொள்ள பெண் தேவை.

4. ஓதாளன், பூர்வீகம் திருப்பூர், 34, 116, சிகப்பு, அசுபதி DME., 7ல் பரிகார செவ். கோவையில் தனியார் நிறுவன வேலை; படித்து வேலை செய்யும் பெண் தேவை.

5. பொருள் தந்த, பூர்வீகம் காங்கேயம், 28, B.E., பெங்களூரில் 'ஆதித்யா பிர்லா' வில் வேலை, திருவாதிரை 3, செவ் இல்லை, 5'4'' சிகப்பு, ஒரேமகன், தந்தை விவசாயம், தொழில் பாரம்பரியப்பெருமை உள்ள உடன் பிறப்புடன் படித்த பெண் தேவை.

6. காரி, பூர்வீகம் சங்ககிரி, 30, B.Com., 6 அடி, சிகப்பு புனர்பூசம், 2-7ல் செவ், 1 சகோதரி, தந்தையுடன் சென்னையில் சொந்தத் தொழில்; படித்த பெண் தேவை.

7. கூறை, பூர்வீகம் திருச்செங்கோடு, 30. B.Tech., 6 அடி மாநிறம் சென்னையில் கணிப்பொறியாளர், மூலம் 3, தந்தை விவசாயம் 1 சகோதரி, படித்த பெண் தேவை.

8. தோடகுலம், காங்கேயம் 30 வயது, B.A., சென்னையில் வங்கி அதிகாரி 5½ அடி அவிட்டம் செவ். இல்லை, பெண் தேவை.

தொடர்புக்கு :-
**டி.கே. சுப்ரமணியன்,**
60, மேகசின் சாலை (பட்ரோடு) பரங்கிமலை, சென்னை - 600 016
தொ. பே.எண். : 044-22311411, 9840364348


❖❖❖❖

# நம்பிக்கை நம் கையில்

வாழ்க்கை என்பது
நிறைவைத் தேடும் பயணம்
நீதான் தொடங்கணும்
எழுந்துவிடு, உடனே தொடங்கிவிடு !

வெற்றியும் இல்லை, தோல்வியும் இல்லை
அது வெறும் மனநிலைதான் !
உண்மை உணரத் தொடங்கிவிடு !
உலகம் உன்னைச் சுற்றி வரும் !

பாதைகள் வேறு, பயணம் ஒன்று !
தாமதப்பட்டால், அவசரப்பட்டால்
விளைவுகள் வேறு ! விளைச்சலும் வேறு !
உரியவேகம் உயரிய விவேகம்
உனது சிறகுகளாகட்டும் !



மொழியும் மவுனமும்
வேறு வேறல்ல !
அது உணர்வின் பயணம்
உள்ளத்தின் கதவைத் திறந்துவிடு !

முயற்சி வைகறையில்
முன்னேற்றம் முளைக்க
நம்பிக்கையுடன் எழுந்துவிடு !

உன்னை
நீயே அடையாளம் காட்ட
உனக்குள்
ஒரு தேடலை முக்கிவிடு !

வைகறை விழிப்பு
வையத்தை ஆளுமாம் !
உறக்கத்தைக் கலைத்து
உடனே எழுந்து விடு !
நம்பிக்கை நம் கையில் இருக்கு !

சிந்தனைக் கவிஞர் கவிதாசன்,
கோவை

❖❖❖❖

## மணமகன் தேவை


| | | |
|---|---|---|
| ஜாதகி பெயர் | : | மதுமதி சந்தோஷ் B.E., MBA., |
| தந்தை பெயர் | : | ராமசாமி |
| பிறந்த தேதி | : | 18-12-1985, நேரம் (7.37 p.m.) |
| பிறந்த ஊர் | : | நாமக்கல் |
| ராசி / லக்னம் | : | கும்பம் / மிதுனம் |
| நட்சத்திரம் | : | பூரட்டாதி |
| குலம் | : | செங்கண்ணிகுலம் |
| உடன் பிறப்பு | : | இருவர் திருமணமாகி விட்டது (பெண்கள்) |
| முகவரி | : | அன்பு நகர், நாமக்கல். செல் : 9843232054 |
| தேவை | : | Any Engineering. (Qualification)<br>Business / Employee |

| | | | |
|---|---|---|---|
| | இரா | | ல |
| சந் | இராசி | | |
| வியா | | | |
| சூரி | சுக், பு<br>சனி | செ<br>கேது | |

| | | | |
|---|---|---|---|
| லக் | சூரி | | சந் |
| சு | அம்சம் | | வியா<br>இரா |
| கே | | | |
| செ | | புத<br>சனி | |

❖❖❖❖

## வாழ்த்துகிறோம்



முதியோர் நலனுக்கான ஆலோசனைக் குழுவில் முதியோர் மருத்துவர் மற்றும் மூத்த குடிமக்கள் மன்றத்தலைவர் கொங்குமாமணி டாக்டர் வ.செ.நடராசன் அவர்களை உறுப்பினராக தமிழக அரசு அறிவித்துள்ளது. (சமூக நலத்துறை, அரசு ஆணை (நிலை) எண். 168) இக்குழு ஆறு மாதத்திற்கு ஒரு முறை கூடி முதியோர்க்கான மாநிலக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதைப் பற்றி விவாதித்து முடிவு எடுக்கும்.

இப்பொறுப்பின் மூலம் முதியோர்க்கான பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தும் வாய்ப்பு பெற்றுள்ள டாக்டர் வ.செ.நடராசன் அவர்களின் தொண்டும், பணியும் மேன்மேலும் சிறந்திட கொங்கு நண்பர்கள் சங்கம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

## நன்றி மடல்



கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கு உளமார்ந்த நன்றி மடல்

மதிப்பிற்குரிய செயலாளர் அவர்களுக்கு,


வணக்கம் நான் பழனி அருகில் உள்ள கூத்தம்பூண்டி என்ற கிராமத்தைச் சேர்ந்தவள். குரூப் II தேர்வில் தேர்ச்சிபெற்று தற்போது தலைமைச் செயலகத்தில் உதவி பிரிவு அலுவலராகப் பணிபுகிறேன். சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் அளித்த உதவி மற்றும் ஆதரவோடு செயலாளரின் ஊக்கமுமே என்னை இந்த நிலைக்கு உயர்த்தி உள்ளது என்பதைப் பணிவோடு தெரிவிப்பதோடு எனது உளமார்ந்த நன்றியைத் தங்கள் முன் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் வரும் காலங்களில் கொங்கு நண்பர்கள் சங்கத்தில் இணைந்து என்னால் இயன்ற பணியாற்றுவேன் என உறுதி கூறுகிறேன். மேலும் கொங்கு நணபர்கள் சங்கப் பணி தொடர வாழ்த்துகிறேன். நன்றி.

தங்கள் உண்மையுள்ள

**சே.பிரபா** (திரு.சேதுபதி - திருமதி விஜயலட்சுமி தம்பதியரின் மகள்)

## நூல் வெளியீட்டு விழா



முதியோர் மருத்துவர் மற்றும் மூத்த குடிமக்கள் மன்றத் தலைவர் டாக்டர் வ.செ.நடராசன் அவர்கள் கடந்த 30 ஆண்டுகளாக முதியோர் மருத்துவத்தில் தான் பெற்ற அனுபவங்களைக் கொண்டு எழுதிய “Healthy Ageing” என்னும் ஆங்கில நூல், 28-02-2010 அன்று சென்னை, கீழ்ப்பாக்கம், ஹோட்டல் பிரைடு அரங்கில் வெளியிடப்பட்டது.

நூலை மாநில திட்டக்குழு அரசு செயலர் டாக்டர். கே.அருள்மொழி அவர்கள் வெளியிட, மூத்த குடிமக்கள் மன்ற உறுப்பினர் திரு. ஆர்.வெங்கடேசன் அவர்கள் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார். ஹெல்பேஜ் இந்தியா இயக்குனர் திருமதி இந்திராணி ராஜதுரை அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். முதியோர் மருத்துவத்தில் நீண்ட அனுபமும், பேராற்றலும் கொண்டு அரிய சேவையாற்றிவரும் டாக்டர் வா.செ.நடராசன் அவர்கள் எழுதிய இந்நூல் ஒரு அரிய பெட்டகமாக விளங்குகிறது என்றால் அது மிகையல்ல. பாரம்பரிய பெருமைமிக்க ‘The Hindu’ நாளிதழில் இந்நூலின் அருமை பெருமைகளும், பயன்களும், மிகவும் பாராட்டப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளன என்பதே இந்நூலின் பெருஞ்சிறப்புக்குச் சான்றாகும்.

(புத்தகம் கிடைக்கும் இடம் : டாக்டர். வ.செ.நடராசன், ஆதிபாரசக்தி கிளினிக், 18 ஏ, பிளவர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010 தொ.பேசி. 044-26412030 (மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை) மற்றும் 17, 17வது தெரு, கியூ பிளாக், அண்ணா நகர், சென்னை - 40. தொ.பேசி : 044-26267282)

## ஆட்கள் தேவை

கொங்கு நண்பர்கள் சங்கம்
சென்னை

சங்கத்தின் புதிய கட்டடத்திற்கு கீழ்க்கண்ட பணியாளர்கள் தேவை :

1. மேலாளர் : 1 No. தகுதி Any Degree, குறைந்தது 2 வருட முன் அனுபவம், ஆண்கள், பெண்கள் விடுதி மற்றும் விருந்தினர் இல்லத்தை மேற்பார்வை செய்ய வேண்டும்.

2. அலுவலக உதவியாளர் 2 Nos. : விருந்தினர் இல்ல வரவேற்பு மற்றும் கணக்குகளை கவனித்தல், +2 படிப்பு மற்றும் Accounts தெரிந்திருக்க வேண்டும்; Computer அறிவு வேண்டும்.

3. Room Boys 4 Nos. : 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சங்க உறுப்பினர்கள் தங்களுக்குத் தெரிந்த தகுதியான நபர்களை செயலாளர் / பொருளாளருக்கு பரிந்துரை செய்யுமாறு வேண்டுகிறோம்.

(தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும். தங்குமிடம் இலவசமாக அளிக்கப்படும்)

தொடர்புக்கு : 9487728666

## வாழ்த்துகிறோம்



சங்கத்தின் மூத்த உறுப்பினரும், கொங்கு சாதனையாளர் விருது பெற்றவருமான பேராசிரியர் டாக்டர். வெ.முருகன் - திருமதி தேன்மொழி தம்பதியரின் புதல்வன் டாக்டர் மு.பாரி M.D., டாக்டர் S.பாஸ்கரன்-டாக்டர் மைதிலி தம்பதியரின் புதல்வி டாக்டர் பா.அர்ச்சனா M.D., ஆகியோர் திருமணம் 25-03-2010 அன்று சென்னையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. 24-03-2010 அன்று சென்னையிலும், 27-03-2010 அன்று கோபிநாதம்பட்டி கூட்ரோடு கொங்கு திருமண மண்டபத்திலும் திருமண வரவேற்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன், டாக்டர் V.C.குழந்தைசாமி, உள்துறை செயலாளர் திருமதி மாலதி IAS, கவிஞர் வைரமுத்து, இயக்குநர் திரு. S.P.முத்துராமன், முன்னாள் தேர்வாணையக்குழு உறுப்பினர் திரு. ஆர்.தமிழ்மணி, டாக்டர். R.குமாரராஜ், முன்னாள் மின்வாரியத் தலைமைப் பொறியாளர் திரு. P.தமிழ்மணி, செம்மொழி நிறுவன அலுவலர் திரு.ராமசாமி, சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. திருவாசகம் மற்றும் ஏராளமான உறவினர்களும், நண்பர்களும் விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். மணமக்கள் எல்லா வளங்களும் பெற்று சிறப்புடன் வாழ்ந்திட சங்கம் வாழ்த்துகிறது.